வா.செ.குழந்தைசாமியின் படைப்புகளில் தமிழ்ப்பணி

முனைவர் பட்ட ஆய்விற்குரிய (Ph.D) முன் வரைவு ஆய்வறிக்கை

முனைவர் பட்ட ஆய்வாளர் (முழுநேரம்)

செல்வி ரா.ஆர்த்தி

பதிவு எண் : 20PHTMF007

ஆய்வு நெறியாளர்

முனைவர் சு.பரணி, எம்.ஏ., எம்.எட்., எம்.பில்., பிஎச்.டி.,

தமிழ்த்துறை

அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்

கோயம்புத்தூர் - 641 043.

டிசம்பர் - 2023

12/12/23
ஆய்வு நெறியாளர்

Dr. S. BHARANI,
Assistant Professor (SS) & HOD i/c,
Department of Tamil,
Avinashilingam Institute for Home Science
and Higher Education for Women,
Coimbatore - 641043.

வா.செ.குழந்தைசாமியின் படைப்புகளில் தமிழ்ப்பணி

தமிழில் காலத்தால் முந்திய இலக்கிய வடிவம் கவிதை எனலாம். இது உலகில் தோன்றிய எல்லா மொழிகளுக்கும் பொருந்தும். சங்க காலம் முதல் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை தமிழிலக்கிய நெடும்பரப்பில் வளர்ச்சிப் பெற்ற பெருமை மரபுக் கவிதைக்கே உரியதாகும். இருபதாம் நூற்றாண்டில் பாரதியார், தேசவிடுதலை, நாட்டு முன்னேற்றம், தமிழ் மொழி வளர்ச்சி போன்ற சமூகக் கருத்துகளை கவிதையின் உள்ளடக்கமாக வைத்துப் பாடினார். பாரதிக்குப் பின்னர் பாரதிதாசன் தனது படைப்புகளில் பெண்மை வாழ்க, தமிழ்மொழி வளர்ச்சி, உலக ஒற்றுமை போன்ற சமூக எதார்த்த நிகழ்வினை தமது கவிதைகளில் பாடுபொருளாக்கினார். இவர்களின் வரிசையில் தனது கவிதைக்கு என்று ஓர் இடத்தை நிறுவி பாரதி, பாரதிதாசன் மரபில் வாழ்ந்து தனது கவிதைகளில் மரபுக்கவிதைக்குரிய இலக்கணங்களை வகுத்தவர் கவிஞர் வா.செ.குழந்தைசாமி ஆவார். இவரின் புனைப்பெயர் குலோத்துங்கன் என்பதாகும். இவர் ஐக்கிய நாடுகள் வரை சென்று துணைவேந்தராகப் பணியாற்றியவர். இவர் தமிழக அரசின் தொழில்நுட்பக்கல்வி இயக்குநராக இருந்தாலும் அறிவியல் தமிழுக்கு என தனது உழைப்பை வழங்கியவர். அறிவியலிலும் ஒரு நாடானது செழிக்க வேண்டுமாயின், பெண் விடுதலையும் தாய்மொழி உணர்வும் தழைத்திருக்க வேண்டும் என்னும் உண்மைகளைத் தனது கவிதைகளாலும், கட்டுரைகளாலும் மக்களுக்கு எடுத்துரைத்துள்ளார். இவ்வாறு இவர் தமிழ் மொழிக்காக ஆற்றிய பணிகளை இவரது படைப்புகளின் வழி ஆராய்வதாக இவ்வாய்வானது அமைகிறது.

ஆய்வுத்தலைப்பு

ஆய்வின் தலைப்பானது, 'வா.செ.குழந்தைசாமியின் படைப்புகளில் தமிழ்ப்பணி' என்பது ஆகும்.

ஆய்வு நோக்கம்

வா.செ.குழந்தைசாமியின் படைப்பானது சமூகத்தை மட்டும் முன்னிறுத்தாமல் தமிழ் மொழியையும், அறிவியல் தொழில் நுட்பக் கல்வியையும் முன்னிறுத்தி அமையப் பெற்றுள்ளது. இவர் தன் படைப்புகளில் தாய்மொழி வழிக் கல்வியின் அவசியத்தையும் அதனால் மக்களுக்கு ஏற்படும் நன்மைகளையும் தனது கவிதை மற்றும் கட்டுரைகளில் எடுத்துரைத்துள்ளார். இதனை விவரிக்கும் பொருட்டு இக்காலச் சூழலின் தேவை அறிந்து விளக்கும் தமிழின் ஆக்கப் பணியையும் அதன் வளர்ச்சியையும் ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

கருதுகோள்

வா.செ.குழந்தைசாமியின் படைப்பானது எழுத்துச் சீர்திருத்தம், தாய்மொழி வழிக் கற்றல், அறிவியல் தமிழ் எனும் மூன்றினை அடிப்படையாகக் கொண்டதாகும். தமிழ்மொழி இன்றைய அறிவியல் துறை அனைத்தையும் தாங்கி நிற்கும் மொழியாக வளர எழுத்துச் சீரமைப்பு, கலைச்சொல்லாக்கம், தமிழுக்குப் புதிய இலக்கணம் போன்ற அனைத்தும் தமிழ் வளர்ச்சிக்கான

வழிமுறைகளாக வா.செ.குழந்தைசாமி எந்த வகையில் அமைத்துக் கொள்கிறார் என்று ஆய்வதே இவ்வாய்வின் கருதுகோளாகும்.

ஆய்வு எல்லை

வா.செ.குழந்தைசாமியின் ‘குலோத்துங்கன் கவிதைகள்’ என்னும் நூலில் உள்ள 279 கவிதைகளும், உரைநடை நூல்களான,

1. பாரதியின் அறிவியல் பார்வை
2. அறிவியல் தமிழ்
3. எழுத்துச் சீரமைப்பு
4. தாய்மொழிப் பெறாததைச் சமுதாயம் பெறாது.
5. மதிவளம் நமது செல்வம்
6. இது கல்வியுகம்
7. உலகச் செவ்வியல் மொழிகளின் வரிசையில் தமிழ்
8. தமிழ் வளர்ச்சி மேம்பாடு

ஆகிய எட்டு உரைநடை நூல்கள் மட்டுமே ஆய்வு எல்லையாக அமைகின்றன.

ஆய்வு ஆதாரங்கள்

வா.செ.குழந்தைசாமியின் ‘குலோத்துங்கன் கவிதைகள்’ 279 மற்றும் அவரது எட்டு உரைநடை நூல்களும் முதன்மைச் சான்றாதாரமாக அமைகின்றது. மேலும், அறிவியல் என்றால் என்ன?, அறிவியல் தமிழ், அறிவியல் தமிழ் வளர்ச்சிப் போக்குகள், வளரும் தமிழ், தமிழ் வரிவடிவ வரலாறு, பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தம், சங்க இலக்கிய நூல்கள், திறனாய்வு நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், ஆய்வேடுகள், அகராதிகள், கலைக்களஞ்சியங்கள் முதலானவை துணைமைச் சான்றாதாரங்களாக அமைகின்றன.

ஆய்வு அணுகுமுறை

வா.செ.குழந்தைசாமியின் படைப்புகளை விளக்குமிடத்து விளக்கமுறை அணுகுமுறையும், பகுத்துக் கூறுமிடத்து பகுப்பாய்வு முறையும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவரது படைப்புகளில் வெளிப்படும் வரிவடிவச் சிந்தனைகளை ஆராயும் பொருட்டு வரலாற்று முறை அணுகுமுறையும், அறிவியல் சார்ந்த தொழில்நுட்ப வளர்ச்சியினை அறியும் விதமாக அறிவியல் முறை அணுகுமுறையும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஆய்வு முன்னோடிகள்

வ.எ	ஆய்வுத் தலைப்பு	ஆய்வாளர்	நெறியாளர்	பல்கலைக்கழகம்	ஆண்டு
1.	குலோத்துங்கன் கவிதைகளில் சமுதாய நோக்கு	சு.கு.பன்னீர் செல்வம்	முனைவர் மு.மீனாட்சி	அரசு கலைக் கல்லூரி	2005

2.	குலோத்துங்கன் கவிதைகள் ஓர் ஆய்வு	ச.க.வாசகி	முனைவர் இரா.தாண்டவன்	சென்னைப் பல்கலைக்கழகம்	2010
3.	குலோத்துங்கன் கவிதைகளில் அறிவியல் பார்வையும் மானுடத்துவமும்	ப.கௌரி	முனைவர் மங்கையர்கரசி	சென்னைப் பல்கலைக்கழகம்	2011
4.	வா.செ.குழந்தைசாமியின் வாழ்வும் தமிழ் பணியும்	கு.பாலுசாமி	முனைவர் ரா.செயராமன்	பாரதியார் பல்கலைக்கழகம்	2012
5.	குலோத்துங்கன் கவிதைகளில் தமிழ் சமூகம்	சு.கோமதி	முனைவர் லோகநாதன்	எஸ்.எஸ். கலைக்கல்லூரி	2013
6.	குலோத்துங்கன் கவிதைகளில் விழுமியங்கள்	கி.சரண்யா	முனைவர். பெ.சக்தி	இராணிமேரி கல்லூரி	2019

ஆய்வுப் பகுப்பு

வா.செ.குழந்தைசாமியின் படைப்புகளில் தமிழ்ப்பணி என்னும் இவ்வாய்வானது முன்னுரை முடிவுரையுடன் ஆறு இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளன.

இயல் - 2 வா.செ.குழந்தைசாமியின் படைப்பாக்கத்திறன்

வா.செ.குழந்தைசாமி என்பவர் கரூர் மாவட்டம் வாங்கலாம்பாளையம் என்னும் ஊரில் 14-07-1929 அன்று பிறந்தவர். இவர் தனது உள்ளூரில் உள்ள திண்ணைப் பள்ளிக்கூடத்தில் தன் தொடக்கக் கல்வியைக் கற்று மேலும் மேற்படிப்பான பி.எஸ்.சியை சேலம் நகராண்மைக் கல்லூரியிலும் காக்கிநாடா (ஆந்திரா) மாநிலத்தில் தன் பொறியியல் கல்வியையும் படித்து முடித்தார். இப்பொறியியல் கல்லூரியின் தொடர்பால் மைய அரசின் கல்வி உதவித்தொகை பெற்று ஜெர்மனிக்கு நீரியல்துறை சார்ந்த படிப்புக்காக தேர்ச்சிப் பெற்று அமெரிக்கா இல்லினாய் பல்கலைக்கழகத்தில் நீர்வளத்துறையில் முனைவர் பட்டம் பெற்றவர்.

வா.செ.குழந்தைசாமியின் படைப்பாற்றல்

படைப்பாக்கம் என்பது தன் உணர்வுக்கு ஏற்ற உள்ளடக்கத்தைத் தேர்வு செய்தல், வடிவத்தைத் தேர்வு செய்தல் என்னும் பரந்து விரிந்த கட்டமைப்பினைக் கொண்டது. படைப்பென்பது படைப்பாளியின் சமூகப் பின்புலம், அறிவுப் பின்புலம் மட்டுமின்றி அவர்தம் சிந்தனையின் வீச்சையும் அடிப்படையாகக் கொண்டது. குலோத்துங்கன் கவிதைகளில் சொற்கள் ஓசை ஒழுங்குடன் வெளிவருகின்றன. சொல்லமைப்பு, கற்களில் செதுக்கிய எழுத்துகள் போல செறிவுடன் வெளிவருகின்றன. இவருடைய கவிதைகளில் அழுத்தமான, ஆழமான கருத்துகள்

இலகுவான மொழி நடையில் வெளிப்படுவது கவிதைக்குத் தனிக் கவர்ச்சியைத் தருவதுடன் கவிஞரின் மொழித் திறத்திற்கும் சான்று பகர்வதாக அமைகிறது.

கவிதைப் படைப்பாக்கத்திறன்

மனிதன் தனியாக இருக்கும் பொழுது அவனுள் எழும் உணர்ச்சிகளே கவிதை எழ அவனை உருவாக்குகின்றன. கவிஞர் குலோத்துங்கன் தனிமையில் இருக்கும்பொழுதும் தம்மைப் பற்றிச் சிந்திக்காமல், மானுடத்தின் ஏற்றத்தினை சிந்தித்ததால் ஒரு சிறந்த மானுடக் கவிஞராக உருப் பெற முடிந்தது எனலாம். கவிதைகளின் இன்பத்தை மட்டும் சொல்லிவிட்டுச் சொல்லாமல், அறநெறிகளையும், அநீதிகளையும் ஏழ்மையுடன் கூடிய துயரத்தினையும், தன்னுணர்ச்சியையும், அறிவியல் கருத்துகளையும், அழிவை நோக்கிச் செல்லும் பண்பாட்டுச் சீரழிவுகளையும் தம் கவிதைகளில் வெளிப்படுத்தியுள்ளார் கவிஞர். நீண்ட காலமாகத் தாம் கண்டு வந்த சமூக அவலங்கள் தம் மனத்தில் நீங்காத துயரினை ஏற்படுத்தியதன் விளைவாகவே இத்தகைய கவிதைகளைப் படைத்துள்ளார். இன்பத்தை உருவாக்குவதற்கோ பொழுதுபோக்கிற்காகவோ அவர் கவிதைகளைப் படைக்கவில்லை. தாம் கூறக் கருதிய கருத்துகளை உறுதியாகக் கூறுவதே அவரது நோக்கமாகும்.

முதிர்ந்த தமிழ்ச் சொற்கள், அளவான வருணனை, நுட்பமான உணர்வை எளிதாக வெளியிடும் திறன், அரிய தகவல்களைக் கவிதையாக்கும் கலை, சுற்றுப்புறத்தைத் தெளிவாக எடுத்தியம்பும் ஆற்றல் போன்றவை இவரது கவிதையின் சிறப்பு எனலாம். கவிதைகள் சுவைப்பதற்கு மட்டுமல்ல, அவை வாழ்வில் பயன்படுவதற்குத் துணை நிற்க வேண்டும் என்பதை இவரது படைப்புகளில் உணர முடிகிறது.

கவிதை நடை

கவிஞர் குலோத்துங்கன் அவர்கள் கவிதைகளில் தனக்கெனத் தனிஇடத்தைப் பிடித்திருக்கிறார். இவரது கவிதைகளில் யான் என்ற சொல் பெரும்பான்மையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு சான்றாக ‘மானுடன் பாடுவேன் யான்’, ‘மதியினைப் போற்றுவேன் யான்’, ‘கோயிலின் தெய்வமும் யான்’ (72), யான் யாத்திரை செய்கிறேன் (142) போன்ற கவிதை அடிகள் சான்று பகர்கின்றன. இவ்வாறெல்லாம் படைத்து சமூகத்துக்கும் தமக்கும் இடையே உள்ள நெருக்கத்தையும், உரிமையையும் உறுதிப்படுத்துகிறார்.

சொல்லாட்சி

கவிதைக்குச் சொல்லாட்சி இன்றியமையாத ஒன்றாகும். தொல்காப்பியர், இலக்கண அடிப்படையில் சொல்லை பெயர்ச்சொல், வினைச்சொல் என இரண்டு வகையாகப் பிரிப்பர்.

சொல்லெனப்படு பெயரே வினையென்
றாயிரண்டென்ப அறிந்திசி னோரே (தொல்.சொல், நூற்பா, 154)

என சொல் பற்றி தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. கவிதைக்கு உருவம் அமைத்து எழுதுவது ஒரு வகை மரபாகும். கவிதை வடிவத்துடன் சொல்லும் விதமானது சிறப்புற அமைகிறது. கவிஞரின் கவிதைகளில் சொல் நயம் மிகவும் சிறப்பான முறையில் எடுத்தாளப்பட்டுள்ளன.

.... உளம்
மூளும் அறிவுப்பசி நெருப் - பாற நான்
மூழ்குவ தெக்கடலோ? (கு.க.ப.80)

அறிவுப் பசியினை நெருப்பு என்ற சொல்லால் உவமிக்கின்றார். அறிவுப்பசி நெருப்பினை ஆற்ற எந்தக் கடலில் மூழ்க வேண்டும்? எனும் வினாவினை எழுப்பும் நயத்தினைக் காண முடிகின்றது. மேலும், இவ்இயலில் குலோத்துங்கனின் இளமைக்காலம், கல்விப்படிப்பு, பணிகள், விருதுகள், உத்தி முறைகள், சொல்லாட்சி ஆகியன குறித்து விவரிக்கப்பட்டுள்ளன.

இயல் - 3 வா.செ.குழந்தைசாமியின் எழுத்துச்சீர்திருத்தம்

எழுத்து

எழுத்து என்பது எழுதப்படுவது என்ற பொருளை உடையது. எழுத்து ஒரு மொழிக்கு அடிப்படையாக அமைகிறது. ஒரு மொழிக்கு நிலையான வரிவடிவத்தைக் கொடுப்பது எழுத்தாகும். 'எழுதப்படுதலின் எழுத்தாகும்மே' (முத்துவீரியம்,1) என்று முத்துவீரியம் குறிப்பிடுகின்றது. எழுத்து இரண்டு வகைப்படும். அவை : 1.முதல் எழுத்து, 2.சார்பெழுத்து ஆகியனவாம்.

எழுத்துகள் தோன்றிய விதம்

ஆதிகாலத்தில் மனிதர்களுக்கு எழுதத் தெரியாது. மக்கள் தாம் கருதிய பொருளைப் பெறுவதற்கும், கருத்துகளை வெளிப்படுத்துவதற்கும் சைகைகளையே பயன்படுத்தினர். அதற்கு அடுத்தகட்டமாக வரைந்து காட்டி எண்ணங்களைக் கருத்துப் பரிமாற்றம் செய்து கொண்டனர்.

'பாரசீக தேசத்து மன்னன் தரையசு என்பவனுக்குச் சித்தியர்கள் ஒரு தூது அனுப்பினதாக இசுராடோட்டசு என்னும் கிரேக்க வரலாற்று ஆசிரியர் குறிப்பிட்டிருக்கின்றார். பகைவர் அஞ்சியோடிப் பதுங்காவிட்டால் இறந்துபடுவர் என்பதே அத்தூதின் செய்தி. ஆனால் இ.்.து எழுத்தில் எழுதப்பட்டதன்று. ஓர் ஆள் வசம் தவளை, எலி, அம்புகள் ஆகியவை அனுப்பப்பட்டன.' (தமிழ் எழுத்தின் தோற்றமும் வளர்ச்சியும், ப.27)

இச்செய்தி தவளை தண்ணீரில் ஒளிவது போலவும், எலியானது வளைக்குள் நுழைவது போலவும், பாரசீகர்கள் பணிந்து ஒளிந்து கொள்ளாது போனால் அம்புகளால் தாக்கிக் கொல்லப்படுவார்கள் என்ற கருத்தினைக் கூறுவதாகும். எழுத்துகள் தோன்றாத அக்காலத்தில் தகவல்களைப் பகிர்ந்து கொள்ள மனிதர்கள் அறிகுறிகளைக் கையாண்டனர் என்பதை அறிய முடிகிறது.

எழுத்துச்சீர்திருத்தம்

வளர்ந்து வரும் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப மொழியானது அனைத்து நிலைகளிலும் வளைந்து கொடுத்து வளர வேண்டிய காலச்சூழல் ஏற்பட்டுள்ளது. அறிவியல் தமிழின் வளர்ச்சிக்குத் தமிழ் மொழியின் வரிவடிவ மாற்றம் அவசியமான தேவையாக

அறிஞர்கள் பலராலும் வலியுறுத்தப்பட்டு வந்திருக்கிறது. அவ்வகையில் வீரமாமுனிவர், பெரியார், வா.செ.குழந்தைசாமி ஆகியோரின் எழுத்துச்சீர்திருத்தப் பணிகள் தமிழ் வரிவடிவ வரலாற்றில் மிக முக்கியமான இடத்தைப் பெறுகிறது எனலாம்.

வீரமாமுனிவரின் எழுத்துச்சீர்திருத்தம்

தொன்றுதொட்டு பின்பற்றி வந்த பழைய எழுத்து முறையை மாற்றி, எகர ஒகாரங்களுக்கு புதிய வரிவடிவங்களை வீரமாமுனிவர் மாற்றி அமைத்தார். எகர, ஏகாரங்கள் மீது நீண்ட புள்ளியை (சிறுகோடு என்று கூட சொல்லலாம்) அமைத்து நெடிலாக மாற்றினார். மெய் எழுத்தின் மீது சுழிந்த புள்ளியை அமைத்து எழுதினார். இதனைப் பற்றி, **'நீட்டல் கழித்தல் குறில் மெய்க் கிருபுள்ளி'** என்று தாம் எழுதிய தொன்னூல் விளக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

உதாரணம் : எரி (தற்பொழுது ஏரி)
ஒடம் (ஓடம்)
மண (முன்பு மெய் மீது புள்ளி இருக்காது)

இது பின்னர், 'எ'விற்கு கீழ்கோடும் (ஏ), 'ஒ'வுக்குப் பதிலாக 'ஓ' என்று சுழிப்பு இட்டும், நெடிலாக வீரமாமுனிவரால் மாற்றம் செய்யப்பட்டது.

பெரியாரின் எழுத்துச்சீர்திருத்தம்

மொழியின் சிறப்பே அதைச் சுலபமாகக் கற்றுக் கொள்ளக் கூடியனவாகும். புதியனவற்றை அறிந்து கொள்ளும் விதமாகவும், சுதந்திரமாகச் சிந்திப்பதற்கு அனுமதிப்பதாகவும் இருத்தல் வேண்டும் என்று தன் கருத்தை முன்னெடுத்து வைக்கிறார் பெரியார்.

பன்னிரண்டு உயிர் எழுத்துகளான, அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ ஆகியவற்றுள் ஐயம் ஔவும் தனித்து நிற்பது போல் உள்ளது. இதனை, அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ என்று எழுதிக்கொண்டே வரும்போது இடையில் ஐ என்ற ஒலியானது ஒழுங்குமுறையிலிருந்து சற்று விலகி நிற்பது தெரிகிறது. அடுத்து ஒ, ஓ என்கிறோம். மறுபடியும் ஔ என்ற எழுத்து வந்து ஒரு தடங்கலாக இருப்பதுபோல் உள்ளது.

எழுத்துகளுக்குள் உள்ள இந்த ஒற்றுமை வேற்றுமைகளைப் பற்றி பெரியார் ஆராய்ந்தார். ஐ மற்றும் ஔ ஆகிய இரண்டு எழுத்துகளும் ஒத்துப் போகாமல் தனித்து நிற்பது போன்ற நிலை நெருடலாக இருப்பதை உணர்ந்தார். எனவே அவர் 'ஐ' என்பதை 'அய்' எனவும், 'ஔ' என்பதை 'அவ்' எனவும் எழுதினால் படிப்பதற்கு எளிமை எனவும், எழுதுவதற்கும் எளிது என எண்ணி அதனைத் தன் பத்திரிகையில் பயன்படுத்தினார். அதாவது ஐயா என்பது பெரியாரியச் சிந்தனையாளர்களால் அய்யா என்று எழுதப்பட்டது.

அரசு ஆணைப்படி ண, ல, ள, ற, ன என்ற ஐந்து எழுத்துகளும் ஆ, ஐ, ஒ, ஓ என்னும் நான்கு எழுத்துகளுடன் இணைந்து வரும் எழுத்துகளான,

ண - ணா, ணை, ணொ, ணோ

ல,ள - லை, ளை

ற - றா, றொ, றோ

ன - னா, னை, னொ, னோ

என்னும் பதின்மூன்று எழுத்துகளின் புதிய வடிவங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இது பெரியார் காலத்து எழுத்துச் சீர்திருத்தம் எனப்பட்டது.

வா.செ.குழந்தைசாமியின் எழுத்துச்சீர்திருத்தம்

தமிழ் நெடுங்கணக்கில் உள்ள 247 ஒலி எழுத்துகளில் ஒன்றும் குறையாது எழுதுவதற்கு, இன்றிருக்கும் 107 குறியீடுகளின் எண்ணிக்கையை 39ஆகக் குறைக்க முடியும். குழந்தைகளின் சுமையைக் கணிசமாகக் குறைக்க முடியும். அதைச் செய்ய வேண்டும் என வா.செ.குழந்தைசாமி கருதுகின்றார். 'தமிழில் உயிர் 12, மெய் 18, உயிர்மெய் 216, ஆய்தம் 1 ஆக 247 ஒலி எழுத்துகள் உள்ளன. இவற்றுள் ஓரெழுத்தைக் கூடக் குறைப்பதன்று நாம் இங்கு விளக்கப்போகும் எழுத்துச் சீரமைப்பின் நோக்கம் அன்று. நமது நோக்கம் தமிழ் நெடுங்கணக்கிலுள்ள 247 ஒலி எழுத்துகளை குறைப்பதாகும்' என்ற வா.செ.குழந்தைசாமியின் தன்னிலை விளக்கம் குறிப்பிடத்தக்கதாகும். இதற்குத் தேவைப்படுவன இகரம், ஈகாரம், உகரம், ஊகாரம் ஆகிய நான்கு உயிர்மெய் வரிசைகளில் செய்யப்பட வேண்டிய சிறிய மாற்றங்கள் தான் என வா.செ.குழந்தைசாமி கருதுகின்றார்.

இயல் - 4 வா.செ.குழந்தைசாமியின் தாய்மொழிவழிக் கல்வி

மொழி

ஒரு மனிதன், மற்றொரு மனிதனிடம் தன் கருத்தினை வெளிப்படுத்துவதற்கு மொழி மிக இன்றியமையாத ஒன்றாகும். மக்கள் அனைவரும் ஒன்றுகூடி ஒரு சமுதாயமாக வாழ்வதற்கு துணையாக உள்ள ஒரு சிறந்த கருவி மொழியாகும்.

தமிழ் அமுத மொழி

தமிழ் என்று சொன்னாலே இனிமையான எனப் பொருள்படும். தமிழ் என்பதற்கு அமிழ்து என்னும் ஓசை ஒலிக்கும். இது தமிழின் சிறப்பினைக் காட்டுகிறது. அகத்தியர் காலத்திலிருந்து இக்காலக் கவிஞர்கள் வரை தமிழ் மொழியின் சிறப்பினை வா.செ.குழந்தைசாமி,

முன்னை மனிதன் அறிவுக் கடலில்
முழுகி எடுத்த முதிர்ந்த முத்து,
தென்னை நீரின், மதுவின், மாதர்
செவ்வை இதழின், மழலை நாவின்
கொன்னை மொழியின் இனிய, விரையும்

கோளின் வெளியின் பெரிய, எங்கள்
அன்னை அமுதத் தமிழின் செல்வம் (கு.க.ப.351)

என்றுரைப்பது சான்றாகிறது. பழமையான தமிழ் மூத்தோர்கள் மூழ்கி எடுத்து முத்து எனக் குறிப்பிட்ட ஆசிரியர். இறுதியில் தமிழன்னை அமுதத் தமிழின் செல்வம் என்கிறார். இக்கருத்து தமிழன்னையை வர்ணிக்க வார்த்தைப் போதாது என்பதை அறியலாம்.

தாய்மொழிவழிக் கல்வி

ஒரு நாட்டின் முன்னேற்ற வளர்ச்சி என்பது கல்வியை அடிப்படையாகக் கொண்டே தான் அமைகிறது. அக்கல்வியானது நமது தாய்மொழியாக இருப்பின் நமது முன்னேற்றப் பயணம் குறுகிய காலத்தில் அதிக வளர்ச்சியை அடையும். இந்திய விடுதலைக்கு முன்பு தாய்மொழிவழிக் கல்வியின் அவசியம் குறித்த சிந்தனை அதிகமாக எழவில்லை. விடுதலைக்கு வித்திட்ட பல கவிஞர்களும் போராட்ட வீரர்களும் விடுதலை உணர்வை ஊட்டுவதற்குத் தாய்மொழியை மட்டுமே நம்பியிருந்தனர்.

தாய்மொழிவழிக் கல்வியின் வளர்ச்சி வேகம்

மனித சமுதாய வளர்ச்சியின் முக்கியமான கட்டத்தில் இன்று நாம் இருக்கிறோம். இன்றைய அறிவு வளர்ச்சியின் வேகத்திற்கும், நமது பழைய அனுபவங்களுக்கும் நெருங்கிய தொடர்பானது இல்லை. புதிய உலகம் என்று நாம் இப்பொழுது கூறி வருகிறோம். நேற்று வரை அந்த சொல்லானது சம்பிரதாயத்திற்காககப் பயன்படுத்தப்பட்டது. இன்று உண்மையிலேயே ஒரு புது உலகம் உருவாகி வருகிறது என வா.செ.குழந்தைசாமி கருத்துகளின் வாயிலாக நாம் அறியலாம்.

கல்வியின் தேவையும் பயன்களும்

- மனிதர்களின் வாழ்வையும், நாட்டின் வாழ்வையும் உயர்த்துவது கல்வியே. இக்கல்வியின் தேவையைப் பழந்தமிழர்கள் நன்குணர்ந்திருந்தனர். சங்க காலத்திலிருந்து இக்காலம் வரை மனிதனுக்குப் பேர், புகழ், பொருள் இவைகளைக் கொடுப்பது கல்வியே.
- கல்வியறிவு என்பது ஆண், பெண் இருவருக்கும் சமமானது. கற்றலில் உயர்வு, தாழ்வு கிடையாது. கற்றவரே நாட்டில் அனைத்துக்கும் மேலானவர். கல்லாதவர் காட்டுமிராண்டிகள் போலவே வாழ்கின்றனர். சமூகத்தில் அன்றிலிருந்து இன்று வரை கல்வியறிவே உயர்வானது எனும் கருத்தானது நிறுவப்படுகின்றது.
- தாய்மொழி வழிக்கல்வி கற்பதினால் மாணவர்கள் தெளிவான அறிவினைப் பெற முடிகின்றது. சிறப்பாக சிந்திக்கும் ஆற்றலைப் பெற முடியும்.

இயல் - 5 வா.செ.குழந்தைசாமியின் அறிவியல் தமிழ்ப்பணி

அறிவியல்

பழங்காலத்தில் மனிதன் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை மட்டுமே வாழ்ந்தனர். ஆனால் மனிதன் தற்போது அறிவியலோடு இணைந்து வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

அறிவியலின் பாதிப்புகள்

கவிஞர் ஒரு பொறியியலாளர். அறிவியலை உயர்த்தி அதன் பெருமைகளைக் கூறினாலும் அதனால் ஏற்படக்கூடிய எதிர்விளைவுகளையும், அறிவியலின் இயலாமையையும் கூறுகின்றார். ஒரு அறிவியல் அறிஞர் அதன் விளைவுகளை மதிப்பிடுவது மிகவும் பொருத்தமானது ஆகும்.

இற்றை அறிவியல் தந்த பொருள்பல
ஏற்றுப் பயன்பெறு சூழ்நிலையில்
குற்றமெனச் சில தோன்றிடுமேல் அவை
கூர்ந்து களைந்திடல் யார் தடுத்தார் (கு.க.ப.510)

அறிவியல் தந்த பொருள்கள் பல. அவற்றை ஏற்றுப் பயன்படுத்துகின்றோம். அவற்றில் சில குற்றமுடையன என்று கண்டறிந்து அதனைப் பயன்படுத்தக் கூடாது என யாரும் தடுப்பதில்லை. அறிவியல் கண்டுபிடிப்பில் சில ஏற்க முடியாததாகவும், பயன்படுத்துதல் தீங்கு விளைவிக்கும் என்றுக் கவிஞர் தனது கவிதையின் வழி உணர்த்துவதனை அறிய முடிகிறது. அறிவியலினால் நன்மையும் தீமையும் உண்டு என்பதனை கவிஞரின் கவிதையின் வழி அறிய முடிகிறது.

அறிவியல் தமிழின் பண்புகள்

- அனைத்து அறிவுத் துறைகளையும் உள்ளடக்கிய தமிழ்.
- ஒரு தனித்தன்மை வாய்ந்த இயற்றமிழ் வகை.
- அறிவியல் கருத்துப் பரிமாற்றத்திற்கான தமிழ்.
- கல்வித் துறையைச் சார்ந்தது.

கலைச்சொல்

அறிவியல் தமிழின் வளர்ச்சியில் கலைச்சொல் அடிப்படை அலகாகும். அறிவியல் செய்திகளை திறம்பட சொல்ல உதவுவது கலைச்சொல். அறிவியலில் நீண்ட ஒரு கருத்தைச் சொல்ல சிறிய வடிவில் அமைந்ததே கலைச்சொல் ஆகும்.

அறிவியல் தமிழின் எதிர்காலத் தேவை

எதிர்காலத் தமிழ் மொழியின் வளர்ச்சியானது இலக்கியம் சார்ந்ததாக மட்டுமில்லாமல் அறிவியல் தமிழ் சார்ந்ததாகவும் உள்ளது. எனவே அறிவியல் தமிழ் வளர்ச்சியும் தமிழில் அறிவியல் தொழில்நுட்பக் கருத்து வெளிப்பாடும் தமிழ்மொழிக்குப் பெரிதும் உறுதுணையாக இருப்பவை. பல்வேறு அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறைச் சார்ந்த களஞ்சிய அகராதிகள் அத்துறைச் சார்ந்த அறிஞர் அல்லது மொழி வல்லுநர்களின் உதவியுடன் வெளிக்கொண்டு வருதல் வேண்டும். இதன் தொடர்பான ஒருங்கிணைப்புப் பொறுப்புகளை தமிழ்நாடு அறிவியல் தமிழ் மன்றம் ஏற்று நடைமுறைப்படுத்துவது சிறந்த ஒன்று. இதன் மூலம் தமிழ் மொழியின் வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றலாம்.

முடிவுரை

- ❖ குலோத்துங்கன் கவிதைகளில் அறிவியல் திறனும் ஆய்வுத் திறனும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. கவிஞரின் உள்ளுணர்வின் வெளிப்பாடாக அவர்தம் கவிதைகள் அமைந்துள்ளன.
- ❖ இவரது கவிதைகள் முதிர்ந்த தமிழ் சொற்களைக் கொண்டிருக்கிறது. அளவான வருணனை, நுட்பமான உணர்வை எளிதாக வெளிப்படுத்தும் திறன், அரிய தகவல்களைக் கவிதையாக்கும் கலை தெளிவாக எடுத்துக் கூறும் விதம் இவரது கவிதையின் சிறப்புகளாகும்.
- ❖ கவிதைகள் அனைத்தும் சிறந்த உத்தி முறைகளைக் கொண்டிருக்கின்றன. இலக்கியக் கூறுகளான உவமை, உருவகம், வருணனை, கற்பனை, குறியீடு, தொன்மம், அங்கதம் ஆகியன இவரது கவிதைகளில் மிகச் சிறப்பாக வெளிப்படுகின்றன.
- ❖ அறிவியல் துறையில் செய்ய வேண்டிய அடிப்படைச் செயல்களையும் ஆற்ற வேண்டிய சாதனைகளையும் அடையாளப்படுத்துகிறார்.
- ❖ தமிழ் மொழியானது உலகம் முழுதும் பரவி தமிழர்களின் நிலை மென்மேலும் உயர்வடைய வேண்டும் என்ற ஆதங்கத்தை அவரது கவிதைகள் மூலம் உணரலாம்.
- ❖ தமிழில் தொன்மை நிறைந்த புகழ்வாய்ந்த நூல்கள் இருந்தாலும் புது நூல்கள் படைத்திட முயற்சி வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார்.
- ❖ அறிவியல் அறிஞராக இருந்தபோதும் தமிழ் மொழியின் மீது ஆழ்ந்த புலமையுடையவராக இருப்பதை அவரது கவிதைகள் மற்றும் கட்டுரைகள் பறை சாற்றுகின்றன. இன்றைய எழுத்தாளர்கள் தமிழின் நிலையினைச் சீர்குலைக்கும் தன்மையை எடுத்துரைத்திருக்கிறார். பழம்பெருமைகளை மட்டும் பேசிக் கொண்டே இருக்காது புதுமைகளை, அறிவியலைத் தமிழில் கொண்டு வர வேண்டும் என்று மிகவும் வலியுறுத்தியுள்ளார்.
- ❖ வா.செ.குழந்தைசாமியின் கவிதைகளில் பாரதி, பாரதிதாசன் ஆகியோரின் தாக்கம் காணப்படுகிறது. அவர்கள் நிலையிலிருந்து வளரும் கால நிலைகளை மனத்திற்கொண்டு அந்த நிலைகளை வா.செ.குழந்தைசாமியின் கவிதைகள் முன்னெடுத்துச் செல்கின்றன எனலாம்.
- ❖ வா.செ.குழந்தைசாமி அறிவியல் உலகம் கலை இலக்கிய உலகம் ஆகிய இரண்டையும் இணைக்கும் தகுதிவாய்ந்த அரிய அறிவியலாளராகத் திகழ்கின்றார். இவரது கலைப் படைப்புகளில் அறிவியல் பார்வையும், அறிவியல் ஆய்வு குறித்த கலை உணர்வுகளும் இடம்பெற்றுள்ளன.
- ❖ வா.செ.குழந்தைசாமியின் அறிவியல் பார்வை, மக்களது வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியின் கூறுபாடுகள் தென்பட வேண்டும் என்பதனை அடிப்படையாகக் கொண்டதாக அமைந்துள்ளன.

❖ தமிழர் முன்னேற, தமிழ்நாடு வளம்பெறத் தமிழ் வழிக்கல்வி தேவை. நம் நாட்டின் வறுமை ஒழிய வேண்டுமெனில், கல்வி தாய்மொழியில் அமைய வேண்டும். தாய்மொழி பெறாததைச் சமுதாயம் பெறாது என்பது வா.செ.குழந்தைசாமியின் ஆணித்தரமான கருத்தாகும்.

❖ இன்று அறிவுத் துறைகளைத் தமிழில் படைப்பதற்கு நாம் பல குறியீடுகளை, பல சூத்திரங்களைப் பயன்படுத்த வேண்டியிருக்கிறது. பல சொற்களை உருவாக்க வேண்டிய தேவை உள்ளது என சில வழிமுறைகளையும் வா.செ.குழந்தைசாமி எடுத்துரைத்துள்ளார்.

பரிந்துரைகள்

வா.செ.குழந்தைசாமியின் படைப்புகளில் தமிழ்ப்பணி என்னும் இவ்வாய்வானது அவர் தமிழ் மொழிக்காக ஆற்றிய பணிகளையும் தமிழ் மொழியின் வளர்ச்சியையும் எடுத்துரைக்கும் விதமாக அமைகிறது. குலோத்துங்கனின் படைப்புகளைக் கொண்டு மேலும் பல ஆய்வுகளை நிகழ்த்தலாம்.

¤ உளவியல் நோக்கில் குலோத்துங்கனின் படைப்புகள்.

¤ தத்துவ நோக்கில் குலோத்துங்கன் கவிதைகள்.

¤ குலோத்துங்கன் கவிதைகளில் காணலாகும் வள்ளலாரின் சிந்தனைகள்.

ஆகிய தலைப்புகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படலாம். ஆய்வின் முடிவில் ஆய்விற்குத் துணை நின்ற நூல்கள், அகராதிகள் முதலானவை துணைநூற்பட்டியலில் இடம்பெறுகின்றன. பின்னிணைப்பில் வா.செ.குழந்தைசாமியின் படம், எழுத்துகளின் வளர்ச்சி நிலை குறித்த படங்கள் போன்றவை இடம் பெறுகின்றன.

ஆய்வுக்கட்டுரைகள்

வ.எ.	கட்டுரைத் தலைப்பு	ஆய்விதழ்	ஆண்டு
1.	குலோத்துங்கன் கவிதைகளில் அழகியல்	தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்	ஜூன் 2023
2.	சூழலியத் திறனாய்வு நோக்கில் குலோத்துங்கனின் படைப்புகள்	தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்	அக்டோபர் 2023